செய்தி வெளியீடு எண்: 22 நாள்: 13.06.2019.

**தேனி மாவட்டம்,**
**சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில்**
**மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-.**

**********

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் வேப்பம்பட்டி, எரக்கோட்டைபட்டி, அப்பிபட்டி, எரசக்கநாயக்கனூர் ஆகிய ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை இன்று (13.06.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, வேப்பம்பட்டியிலிருந்து சீப்பாலக்கோட்டை செல்லும் சாலையில் புதிய தார்ச்சாலைகள் அமைக்கும் பணியினையும், எரக்கோட்டைபட்டியில் பகுதி நேர நியாயவிலைக்கடையினையும், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடிநீர் வசதியினையும், புதிய வகுப்பறைகள் கட்டுமான பணியினையும், அப்பிபட்டி ஊராட்சி உயா்நிலைப்பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகளையும், எரசக்க நாயக்கனூர் சுண்ணாம்பு ஓடையில் பிரதம மந்திரி சாலை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், எரக்கோடைபட்டி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாகவும், சுகாதாரமாகவும் அளிக்கப்படுகிறதா எனவும், கன்னிமார் கோவிலில் சாலை அமைக்கும் பணியினையும், சின்னூத்து ஓடையில் கட்டப்பட்டு வரும் தடுப்பணைகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின், பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மேற்கொள்ளப்படும் பணிகள் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு தரமானவையாகவும், உறுதியானவையாகவும் அமைத்திட்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலா்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ,ப., அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் கவிதா, உதவி செயற்பொறியாளர் முத்துமாரி, வட்டார வளர்ச்சி அலுவலர் பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**